## Jaffna University International Research Conference - 2012

## JUICE - 2012

## "Capacity Development in a Post-war Context"

# Proceedings of the Abstracts of JUICE - 2012

July 20-21, 2012
University of Jaffna
Jaffna
Sri Lanka

## Publication Chairs

Dr. B. Nimalathasan
Dr. A. Ramanan
Mr. K. Thabotharan

## Persons-in-charge

| | |
|---|---|
| Agriculture | Dr. (Ms.) J. Sinniah |
| Applied Sciences and Technology | Dr. E. Y. A. Charles |
| Commerce and Management | Mrs. R. Yogendrarajah |
| Education | Dr. (Mrs.) A. Sathiaseelan |
| Health and Medical Sciences | Dr. A. Murugananthan |
| Humanities and Fine Arts | Prof. K. Visakaruban |
| Information Sciences and Technology | Mrs. L. Umashankar |
| Pure Sciences | Dr. P. Abiman |
| Social Sciences | Prof. V.P. Sivanathan |

ISSN: 2279 - 1922

JUICE-2012
University of Jaffna
Thirunelvely
Jaffna
Sri Lanka

# யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் மீனவக் குடும்பங்களின் வறுமை நிலை பற்றிய ஓர் ஆய்வு

சு.சி. உதயகுமார், பி. சிவதர்சன்

Department of Economics, University of Jaffna, Sri Lanka

ssuthayan@yahoo.com

**சுருக்கம்:** இயற்கை அன்னையின் கொடைகளுள் மகத்தான வளமாகக் காணப்படும் கடல்வளத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளுள் மீன்பிடித்தொழில் முக்கியம் பெறுவதுடன், சர்வதேச ரீதியில் முக்கியத்துவமான தொழிலாகவும், உள்ளது. இவ்வகையில் இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பரப்பிலும் உள்நாட்டு நீர்நிலைகளிலும் பெருமளவில் காணப்படும் மீன்வளங்கள் இதுவரை சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. திட்டமிட்ட ஒழுங்கு முறையில் இவ்வளங்கள் பயன்படுத்தப்படுமாயின் நாட்டின் பொருளாதாரத்திற்கு கடல்சார் தொழில்துறையால் கணிசமான பங்களிப்பினை வழங்க முடியும். மீன்பிடித்தொழிலின் இயல்பானது மீனவக் குடும்பங்களிடையே வறுமையைத் தோற்றுவித்துள்ளது. வறுமை என்பது தீராத நோயாக மக்களிடையே பரவிக்காணப்படுகின்றது. இது உலக நிலையில் விரிவான பரிமாணத்தினைப் பெற்றுள்ளது. கல்வி மற்றும் சுகாதார ஆரோக்கியத்தில் குறைந்த நிலை, பொருட்களின் பற்றாக்குறை, அவற்றின் இழப்பு, மனிதவள இழப்பு, மக்களின் குரலுக்கு மதிப்பின்மை, அதிகாரமின்மை மற்றும் பல இழப்புக்களுக்கு உட்படல் என்பவற்றை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது வறுமையானது பொருளாதார இயல்தகமைக் கருத்துக்களுக்கு அப்பால் சென்று அரசியலினதும் மனித உரிமைகளினதும் ஆக்கத்தினுள் நீடிக்கின்ற பரிமாணங்களை உள்ளடக்குவதாக அமைகின்றது. வறுமையானது நச்சு வட்டத்தன்மையில் இடம்பெறுகின்றது. இதனை வழிப்படுத்தும் காரணிகளாவன உணவு நெருக்கடி, வதிவிட நெருக்கடி, போசாக்கின்மை, தொற்று நோய் ஆபத்துக்கள், மனவடு போன்றனவாகும். இவ்வாறான நிலைப்பாடுகளினை மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய காரணிகளின் பரிமாணங்களை ஆராய்வதாகவே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்கள், அவற்றின் அமைவிடம், அமைப்பு, புவியியல் பின்னணிகள் போன்றன மீன்பிடித் தொழிலுக்கு சாதகமாக அமைந்துள்ளன. இருப்பினும் இந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் பொருளாதார நிலையோ அல்லது வாழ்வாதார நிலையோ பெரிதும் வறுமையிலேயே இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. வறுமை என்பது தனியொரு பிரச்சினையோடு நின்றுவிடவில்லை. அது ஒரு நச்சுவட்ட சுழற்சியில் இயங்குவதால் மக்கள் மேலும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். எனவே யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் மீனவக் குடும்பங்களின் வறுமை நிலையைப் பல்பரிமாண நோக்கில் ஆராய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த ஆய்வுக்கான ஆய்வுக்களமான ஆய்வுப்பிரதேசமானது இலங்கைத் தீவின் வடக்கே குறிப்பாக வடமாகாணத்தில் அமைந்துள்ள 5 மாவட்டங்களில் ஒன்றான, யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கிய நிர்வாக மையப் பகுதிகளைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ள 28 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவாக உள்ளது. நெடுங்குளம் (J/62) கொழும்புத்துறை கிழக்கு (J/63), கொழும்புத்துறை மேற்கு (J/64), பாசையூர் கிழக்கு (J/65), பாசையூர் மேற்கு (J/66), ஈச்சமோட்டை (J/67), திருநகர் (J/68), றெக்கிளமேசன் கிழக்கு (J/69), றெக்கிளமேசன் மேற்கு (J/70), குருநகர் கிழக்கு (J/71), குருநகர் மேற்கு (J/72) சின்னக்கடை போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கின்ற மீனவக்குடும்பங்களிடையே வறுமை நிலை பெருமளவில் காணப்படுகின்றது. இங்கு இயற்கையின் அனர்த்தமும், யுத்தத்தின் விளைவுகளால் வந்த கடல்வலயத் தடைச்சட்டங்களும், அதனுடனான கட்டுப்பாடுகளும் இப்பிரதேச மக்களது பொருளாதார மேம்பாட்டிற்குப் பாரிய சவால்களாக அமைந்துள்ளன.